ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

शम्भोर्ध्यानकृते मनःस्तुतिकृते वाक्पाणिरप्यर्चितुं
नेत्रे द्रष्टुमपि प्रदक्षिणकृते पादौ च कर्णौ गुणान् ।
श्रोतुं चेति सुखाप्तये च जनितान्येतानि सर्वे जनाः
दुर्मार्गे विनियुज्य कष्टमसकृत्पापार्जनं कुर्वते ॥

பரமேசுவரனுடைய தியானத்தின் பொருட்டு மனதையும், போற்ற வேண்டியதற்காக வாக்கையும், அர்ச்சிப்பதற்குக் கைகளையும், அவரது திவ்ய மூர்த்தியை தர்சிக்கவேண்டி கண்களையும், பிரதக்ஷிணம்செய்ய பாதங்களையும், அவரது சிறந்த குணங்களைக் கேட்பதற்குச் செவிகளையும், இவ்விதம் சுகம் பெறவேண்டி பகவானால் சிருஷ்டிக்கப் பட்டுள்ள இவ்விந்திரியங்களை தீய வழியிற் புகும்படி செய்து சகல ஜனங்களும் பாபங்களை சம்பாதிக்கின்றார்கள். அந்தோ! கஷ்டம்!

ஸர்வலோக சரண்யரான பகவான் ஜனங்களை சிருஷ்டித்து அவர்கள் சுகத்தை யடைய வேண்டியதற் குற்ற சாதனங்களாக மனம், வாக்கு, கை, கால், கண், செவி எனப்பெயர் பூண்ட இந்திரியங்களையும் சரீரத்துடன் கூடவே சிருஷ்டித்திருக்கின்றார். இவற்றால், பிறர்களின் உதவியை நாடாமலும், ஒரு சிறிதும் பொருட் செலவின்றியும், கடவுளைக்குறித்து, தியானம் ஸ்தோத்திரம், அர்ச்சனை, தர்சனம், பிரதக்ஷிணம் முதலிய நற்கர்மங்களை யனுஷ்டித்து சகலரும் சுலபமாய் பிறவிப்பிணியைப் போக்கிக்கொள்ளலாம். அஃதன்றி, இன்றியமையாத நமது சுகத்தைக் கருதி பரமனால் சிருஷ்டிக்கப்பட்ட இக்கரணங்களைக் கொண்டே இதற்கு முற்றிலும் மாறுதலாக அதிக துக்கத்திற்குக் காரணமான பற்பல தீயகருமங்களை ஒவ்வொரு கரணத்தாலும் எப்பொழுதும் செய்து கொண்டே வருகின்றோம். இனியாகிலும் சிறிது கவனித்து நமது இந்திரியங்களை பகவானுடைய தியானம் ஸ்தோத்திரம்முதலிய நற்கர்மங்களில் பிரவேசிக்கச் செய்து விசேஷ சிரேயஸ்ஸை யடைவது தான் இம்மானிடப் பிறவியின் முக்கியமான பயனென நன்குணர்ந்து அதன் படி பின்பற்றி ஒழுகுவோமாக சுபம்

ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி-௵ மார்கழி-௴ ௨௰

சரணமடைந்தோரைப் பாதுகாப்பதே
சிறந்த தர்மம்.

ஹே வேடர் குல வேந்த! என்று சம்போதனம் செய்து தனது இனிய வசனங்களால் அவனை நல்வரவு கூறி தங்களுக்கு இப்பொழுது வேண்டிய சௌகரியங்களைத் தெரிவித்தால் நான் செய்யத் தயாராயிருக்கிறேன். நமது வீட்டையும், பந்துக்களையும் விட்டு அனாதையாய் இன்றிரவு இங்கு தங்கும்படி நேர்ந்து விட்டதேயென்று சிந்திக்கவேண்டாம். இப்பொழுது தாங்கள் தங்களுடைய கிரகத்திலேயே இருக்கிறீர்கள். ஆகையால் சங்கையின்றித் தங்களுக்கு ஆகவேண்டிய காரியங்களை சீக்கிரம் என்னிடம் அறிவித்து என்னால் செய்யப்படும் கைங்கர்யத்தைக் கிரகித்துக் கொண்டு என்னை தன்யனாக்கவேண்டும், முற்பிறவியில் செய்யப்பட்ட என் தவத்தின் பயனாக பார்வதி நாதனான ஸ்ரீ பரமேசுவரனால் இங்கு வந்து என்னைச் சரணாகதியடையும்படி செய்யப் பட்டிருக்கிறீர்கள். இவவிதம் சரணாகதியடைந்த தங்களுக்கு இச்சமயம் என்னாலியன்ற வரை உதவிபுரிந்து ஜன்ம ஸாபல்யத்தை அடையவேண்டுமென்ற திண்ணமான எண்ணங்கொண்டு தங்களிடம் வந்தேன். சத்துரு வாயிருப்பினும் தன் இல்லத்திற்கு வந்து விடுவானேயாகில் அவனை உசிதமான அதிதிஸத்காரத்தாலாராதித்து வழிபடவேண்டியது இல்லற தர்மத்தை நடத்துபவனது முதற் கடமையன்றோ?

अरावप्युचितं कार्यमातिथ्यं गृहमागते ।
छेत्तुमप्यागते छायां नोपसंहरते द्रुमः ॥

விருக்ஷமானது தன்னை வெட்ட வருபவனுக்கும் நிழலைக் கொடுத்து ரக்ஷிக்கின்றதேயல்லாமல், நம்மைக் கொல்லவரும் சத்துருவென்று அவனுக்குத்தன் சாயையைக் கொடாமல் இழுத்துக்கொள்ளவில்லை. இவ்விதமே,

शरणागतस्य कर्तव्यमातिथ्यं हि प्रयत्नतः ।
पञ्चयज्ञप्रवृत्तेन गृहस्थेन विशेषतः ॥

என்று சாஸ்திரம் வெளியிடுகின்றது.

இதனாலும் சரணமடைந்தோர்களுக்கு, தாம் எவ்வளவு வருந்தினாலும் அவர்களைக் காப்பாற்ற வேண்டுவது முதற்கருமமென்றும், பஞ்சயக்ஞம் என்கிற கர்மாவை யனுஷ்டிக்கும் கிரஹஸ்தர்கள் அவசியம் அதிதிகளைப் பூஜிக்கவேண்டுமென்றும் போதிக்கப்படுகிறது. ஆகையால் நீர் ஐயமுறாமல் பிரியத்துடன் விருப்பமுள்ளதை எனக்கு அறிவியும். அவ்வகைகளனைத்தையும் சந்தோஷமாய் நான் செய்கிறேன். உமது மனதில் கிஞ்சிற்றேனும் சோகத்திற் கிடங்கொடுக்கலாகாது என அன்புடன்கூறும் அப் புறாவின் பிரியமான வார்த்தையைக் கேட்ட கிராதன் கூறுகின்றான். ஹே பக்ஷி சிரேஷ்டனே! குளிரினால் நான் மிகவும் வருந்துகிறேன். அக் கஷ்டத்தை முதன்முதலில் நிவர்த்திசெய்ய வேண்டுமென்று தெரிவித்தான். இதைச் செவியுற்ற புறாவானது சந்தோஷத்துடன் அதிவேகமாய்க் காய்ந்த சறகுகளைக்கொண்டுவந்துகுவித்து, அதன்கண் அக்னியிட்டு நன்றாய் எரியும்படி செய்து, அவ்வேடனைக் கூவிக்குளிர் காயச்செய்தது. அவனும் அவ்வண்ணமே நன்கு ஜ்வலிக்கும் அவ் வக்னியில் தன் சரீரத்தைப் பலதடவை காயச் செய்து அக்னியிலிருந்தும் மீண்டுவந்த உயிரை யடைந்தவனாகி மிக்க சந்தோஷத்துடன் பேசுவானாயினான். பக்ஷியைப்பார்த்து தனக்கிருக்கும்படியான பசியின் கொடுமையைத் தீர்க்கவேண்டி உசிதமான ஆகாரம் வேண்டுமென்றான். இவனதபிப்பிராயத்தை யறிந்த அப் புறா இயம்பலுற்றது.

न मेऽस्ति विभवो येन नाशयेयं तव क्षुधम् ।
उत्पन्नेनहि जीवामो वयं नित्यं वनौकसः ।
सञ्चयो नास्तिचास्माकं मुनीनामिव कानने ॥

ஹே வேடநாயக! தற்காலம் தங்களுக்கிருக்கும் பசியைத் தீர்க்கவேண்டிய தற்குரிய சக்தியைக் கடவுளளிக்கவில்லையேயென்று வருந்துகிறேன். நாங்கள் வனத்திலிருப்பவர்களாகையால் மஹரிஷிகளைப்போல் ஒவ்வொரு தினமும் வெளியிற் சென்று கிடைத்ததைக்கொண்டு ஜீவிக்கிறோம். தங்களுக்குக் கொடுத்து உதவிபுரியும்படியான ஆகாரம் சேர்த்துவைக்கப் படவில்லையே. ஒவ்வொரு நாளுக்குரிய ஆகாரமே கிடைக்கின்றது. அதைக்கொண்டே ஒவ்வொருநாளும் காலக்ஷேபம் செய்துவருகிறோம் என்று கூறி, மிகவும் வாடிய முகத்துடன் இச்சமயம் நாம் என்செய்வதென்று ஆலோசித்துச்சற்றுநேரம் சிந்தித்தது. (தொடரும்)

தியானோபாயங்கள்.

"चित्तवृत्तिनिरोधस्तु योग इत्यभिधीयते"

என்ற பதஞ்சலி மகரிஷியின் வாக்கியங்களால் யோகமென்பது சித்தவிருத்தி நிரோதமென்று சொல்லப்படும். சித்தவிருத்தியென்றால் நினைக்குந்தன்மை. நினைக்குந்தன்மையின்றி, அஃதாவது எதையும்பற்றி நினையாமல் சங்கல்ப விகல்பங்களற்றிருப்பதுவே யோக நிலைமையாம். மனோவியாபார ராஹித்திய மெனப்பொருள்படும் இதையே. மேல்நாட்டு நிபுணர்கள் "மெடிடேஷன்" (Meditation) என்றும், "கான்ஸென்ட்ரேஷன்" (Concentration) என்றும் வியவகரிக்கின்றனர். மெடிடேஷன் (Meditation) என்றால் தியானம் என்றும், கான்ஸென்ட்ரேஷன் (Concentration) என்றால் தாரணையென்றும் நாம் சாதா

ரணமாகப் பொருள் கொள்கிறோம். (Blavatsky) பிளேவட்ஸ்கி என்னும் யோகினிபால் ஸித்தர்கள் பாஷையிலிருந்து மொழி பெயர்த்தெழுதப் பட்டதாகச்சொல்லப்படும் "மௌனவாக்கு" (Voice of Silence) என்னும்நூலில் "மனதென்பது உண்மையைக் கொல்லுகின்ற பெருங் கொலையாளி. சிஷ்யனானவன் (யோகாப்யாஸி) இக் கொலையாளியைக் கொல்லவேண்டும்" என்று எழுதியுள்ளார். இங்கு உண்மையென்பது சத்தியம். சத்தியமான பிரம்ம வஸ்துவை நமக்கு விளங்காமற் செய்வது மனோ விகாரங்களின் இயல்பு. மனம்போன வழியே நாமும் போவதால் நமக்கு சத்தியம் கோசரமாவதில்லை. ஆகவே மனோ விகாரங்கள் ஒழிந்தாலன்றி, சத்திய வஸ்துவைக் காணமுடியாதாகையால் இவற்றை ஒழித்தல் வேண்டுமெனச் சொல்லப் பட்டது. இது போலவே

मनोऽभिधानो हन्ता स्यात् साक्षात्सत्यस्य वै महान् ।
तद्धन्तव्यं मनः पूर्वं योगाभ्यासरतैर्बुधैः ॥

மனம் என்னும் பெயர் பூண்ட ஓர் மஹான், ஸத்ய வஸ்துவை பிறரால் அறியமுடியாமல் கொன்றுவிடுகின்றான். ஆகையால் யோகாப்யாஸத்தில் விருப்பமுள்ள வித்வான்கள் மனதைக் கொன்று தமக்கு வசமாக்கிக் கொள்ளவேண்டும் என்ற இவ் வசனமும் நம் சாஸ்திரங்களின்கண் உள்ளபடியாலும், எப் பாஷையில் சொன்னாலும் பொருள் ஒன்றே.

"ஓ சிஷ்ய! ஆதலால் நீ தியானிக்கவேண்டுவது அவசியமென்றெண்ணித் துணியக்கடவாய்." என்று கூறப்பட்டிருக்கின்றது. நம் சாஸ்திரங்களின்கண் மனதைத் தியானேந்திரியமெனவும் கூறியிருப்பதையும் காணலாம். இந்திரியங்களுக்கு அரசன் மனதென்றும், மேற்சொன்ன "மௌனவாக்கு" எனும் நூல் புகட்டுகின்றது. இந்தக் கிரமம் எப்படியென்று சற்று ஊகிப்போம். அதிபாஹ்யமாக விருக்கும் ஒலி, உணர்ச்சி, உருவம், ரஸம், கந்தம் என்னும் ஐம்புலன்களே விஷயங்களைக் கிரகிக்கும் குணமுடைய கருவிகள். இவையே बाह्यप्रपञ्चम् என்று

வடமொழியில் வியவகரிக்கப்படும் வெளியுலகை யறிவதற்குற்ற சாதனங்கள் இவ் வைம்புலன்களை வெளிக்கோட்டைக்கு ஒப்பிடுவோமாகில், இதற்குள்ளிருக்கும் மனதானது புலன்களெனும் காவலர்கள் வந்து தெரிவிக்கும் விஷயங்களுக்குத் தனது யோசனையால் உருவங்களளித்து ஒருங்காய்ச் சீர்படுத்துகின்றதெனலாம். ஐம்புலன்களறிவிக்கும் விஷயங்களைக் குறித்து நினைத்தலே மனதின் மாண்பு. மனதின் காலமெல்லாம் இப்படி நினைப்பதிலேயே கழிகின்றது. இவ்வாறு நினைப்பதில் புலன்களாலறியப்பட்ட விஷயங்களைச் சோம்பலுடன் பிரயோசனமின்றி, அவைகள் வந்தவாறே மாறுபாடின்றிச் சிற்சில சமயங்களில் நினைப்பதுமுண்டு. அன்றிப் புதிதாயும் விநோதமாயும் பல கற்பனைகள் செய்துகொண்டு, இந்திரிய கோசரமான விஷயங்களை இவைகளுடன் கலந்து, நினைப்பதும் உண்டு. இம் மனத்துள் ளிருப்பதுதான் ஆத்மா (Soul) என்பது. நான் (I) என்பதும் அஃதேயாம். இந்திரியங்கள், மனது, அஹம் ஆகிய இம் மூன்றைச் சுற்றிலும் இவைகளினூடும் ஓர்வித சூக்ஷ்மமான தேஜஸ் (Aura) கவர்ந்துகொண்டிருக்கிறது. இதற்கு 'எண்ணத்தின் தேஜஸ் (Aura of motive) அல்லது மனோசலத்தினாலாகும் விகாரங்களைக் குறிக்கும் ஆகாயம் (Atmosphere of emotion) என்று பெயர். ஒரே படத்தை இருவர் பார்க்கின்றனர். இதிலொருவர் பரிசுத்த எண்ணமுள்ளவர், மற்றொருவர் கெட்ட எண்ணமுற்றவர். இவ் விருவகை எண்ணங்களைச் சார்ந்திருப்பதற்குத் தக்கபடி, மனதின் ஆகாயம் (மனதைச் சுற்றியுள்ள ஆகாயம்) உயர்ந்ததன்மை யுடையதாயாவது இழிகுணமுடையதாயாவது இருக்கும். இந்த ஆகாயத்தில் மனதென்னும் சிறு பறவையானது, உயர்ந்து ஆகாயத்தை யளாவியோ, அல்லது தாழ்ந்து பூமியை நோக்கியோ பறக்கின்றது.

தாரணையென்றால், மனதை ஓரெண்ணத்திலேயே நிறுத்துவது. இஃது எண்ணத்திற்குத் தக்கவாறு உயர்ந்ததாகவாவது இழிவானதாயாவது இருக்கும். தியானமென்றால் மேற்

கூறிய 'தேஜஸ்ஸின் சம்பந்தமான ஆகாயத்திலுள்ள மலினத்தைப் போக்கித் தெளிவாக்கி, நிர்மலபக்தி யென்னுமிந்த சுத்தவாகாயத்தில், அசஞ்சல சாந்தமென்னும் பலத்துடன்கூடி மேனேக்கித் தனக்கிஷ்ட பதார்த்தத்தின்மீது நினைவுகொண்டிருப்பதுவாம்.

மனதானது தற்காலத்தில் உபயோகித்துக் கொண்டிருக்கும் இந்திரியத்தின் வழியே வெளியேபோய், (பஹிர்முகமாய்) புலப்பட்ட விஷயத்திற் புகுந்து, தானே அவ்விஷயத்தின் ஸ்வரூபமாகின்றது. அதாவது அவ் விஷயத்தின் ரூபத்தைத் தான் தரிக்கின்றதென்று பதஞ்சலி மகரிஷி போதிக்கின்றனர். இதனுற்ருன், மனது விஷயத்தின் ரூபத்தை யறியலாயிற்று. இதுவே ரூபக்ஞானம் உதிக்கும் வழியாம். இவ்வித ரூபக்ஞானமென்பதும், ஒரு வஸ்துவின்பேரிலாவது, ஒரு வஸ்துவின் ஓர் அம்சம் அல்லது கிளையின்பேரிலாவது அல்லது எதன்பேரிலாவது ஏகாக்ரமாய் சலனமற்று நிற்கக்கூடிய ஓர் மனதில் அணுமுதல் அண்டமீருயுள்ள ஞானமாகும். அதாவது ஸர்வக்ஞத்வம் உதிக்குமென்று சொல்வது ஆச்சரியமோ! பதஞ்சலி மகரிஷி இந்திரியகோசரமான விஷயத்தின்ரூபத்தை மனது தரிக்கின்றதெனச் சொல்லியவிடத்து, ரூபமென்றதினுல் வத்துவின் ஆகாரம் (आकारम्)மாத்திரம் கூறப்படவில்லை. ஆனுல், ஸ்தூலசூக்ஷ்மாதி ஸப்தலோகங்களிலும், ஜாக்ர ஸ்வப்னதி ஸப்தாவஸ்த்தைகளிலும், அதற்குண்டான குணசமூகத்தையும் ஸ்திதிகளையும் இவ் வவஸ்தைகளில் குறித்த வத்துவுக்கும், இதர மற்றைய வத்துக்களுக்குமுள்ள சம்பந்தா சம்பந்தங்களையும் ரூபமென்ற சப்தத்தால் குறிக்கப்பட்டது. ஆனதுபற்றி, மனதானது ஒரே வத்துவென்பது துணிபு. அல்லது விஷயத்தைக்குறித்து அப்பியாசபலத்தா லசையாது நிலைத்திருக்கச் செய்வோமானுல் அம் மனது மேன்மேலும் அவ் விஷயத்தினுட் புகுந்து, மேற் சொல்லப்பட்ட ஒவ்வொரு அவஸ்தைகளிலும், ஒவ்வொரு லோகங்களிலும் அவ்வத்துவின் குணதிசயங்களை யெல்லாம்

அறிகின்றது. அப்பொழுது அந்த வத்துவின் பாஹ்பாந்தா குணதத்துவங்களும் அவற்றின் சம்பந்தா சம்பந்தங்களும் அடங்கிய ரூபம் மனதில் பிரதிபலிக்கின்றது.

மனதிற்குள் ஆத்மா விருக்கின்றதென்று முன்னமேயே சொன்னேமல்லவா? மனதில் இவ்வாறு உதயமான ரூபம் ஆத்மாவை யடைகின்றது. ஞான ஸ்வரூபமே ஆத்மாவாகையால், ஆத்மா அறிகின்றதெனக் கூறினேம். இதுவரை மனதை ஓர் பறவைக்கொப்பிட்டோம். பறவையினத்திலும் நிலையற்ற புத்திசாபல்யமுள்ள பட்சியானது ஓரிடத்திலும் ஒன்றின்பேரிலும் நீடித்துத் தங்கியிராது. நீடித்திராத காரணத்தால் எவ் விஷயத்தைப்பற்றியும் ஏதாவது தெரிந்துகொள்ள அதற்கு அவகாசமில்லாமல் போய்விடுகின்றது. ஒன்றைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்குங்கால், அதன் சார்பாய்த் தோற்றக்கூடிய எண்ணங்களை (Association of ideas) கைக்கொண்டு அவை செல்லும் வழிகளிலலைந்து, இறுதியிலொன்றையும் தீர வறியாமற் போகின்றது. உதாரணமாக— ஒரு பூனைக்குட்டி விளையாடுவதைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருக்கையில் உடனே மனது பூனையின்மேற் செல்லுகின்றது. பூனையை நினைத்தமாத்திரத்தில் பாலின் ஞாபகம் வருகின்றது. பாலி லிருந்து மாடு, மாட்டினின்று இடையன், இவ்வாறாக அனேக விஷயங்களை நினைத்துக்கொண்டு போவது மனதிற்கு இயல்பேயன்றி பூனைக்குட்டியின் விளையாட்டைக் கவனித்தறியாமற் போகின்றது. சாதாரணமாய், "நான் நினைக்கிறேன்" என்று சொல்லுகிறோமல்லவா ? இது சரியல்ல. "ஒரு விஷயத்தினின்று மற்றொன்றுக்கு மனம் தன்னிஷ்டப்படி குதித்தோடுகின்றது." என்று சொல்லவேண்டுவதே கிரமம். இதைக் கவனிக்குமிடத்து அந்தோ! திக்கற்றவர்களா யிருக்கிறோம். மனதோ நமக்கடங்கவில்லை. இதுகொண்டே புலவர்பெருமானான தாயுமானஸ்வாமிகள் "சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது' எனத் தேசோமயானந்த படலத்தில் கூறியுள்ளார்போலும்.

நிற்க, மேலே உதாகரிக்கப்பட்ட பூனைக்குட்டி முதலிய கோவையில் ஒவ்வொரு சந்தியினின்று எவ்வளவோ மார்க்கங்களாக மனது பிரிந்தோடலாம். எப்படியெனில், பூனைக்குட்டியைப் பார்த்விடத்து, பூனையைக் குத்தும் மறவனையும் அவன் வசிக்கும் காட்டையும், அதிலுள்ள துஷ்டமிருகங்களையும்பற்றி நினைவு போகலாம். அல்லது பூனைகளை யுயிருடனிருக்கையிற் சித்திரவதை செய்தறுத்துக் குடலைக் கொட்டி (Vivisection) பரீக்ஷை செய்து, சரீரசாஸ்திரம் படிக்கும் ஆங்கிலவித்துவான்களையும் நினைக்கலாம். இவ்வாறு ஒன்றைக்கண்டவுடனே மனது அனேக வழிகளிற் பற்பலவிதமாக இழுபடுகின்றது. இப்படி இழுபடுகிற வழியானது இயற்கை ஸ்வபாவத்தையும், மனோநோக்கத்தையும், அபிமான விசேஷத்தையும் பொருத்ததாகும். எங்ஙனமெனில், எவனெவனுக்கு எதன்பேரிலிஷ்டமோ, எது வழக்கமோ, எது இயற்கையோ, அந்தந்த சம்பந்தத்தில் மனதைச் செலுத்திப் புலப்பட்ட விஷயத்தினின்று கொண்டு போவான். இத்தகைய மனோபாவத்தையும், அதன் சார்பையும், இயற்கைத் தன்மையையும், மனதை யொட்டியுள்ள தேஜஸானது குறிக்கின்றது. இந்த அவாக்களும், சார்புநோக்கங்களும் அந்த தேஜஸில் பற்பல வர்ணங்களா யகப்படுகின்றன. இவ்விதம் விரிவாய் மேற் கூறப்பட்டுள்ளதின் கருத்து யாதெனில், ஒரே வத்து அல்லது, ஒரே விஷயத்தைப்பற்றி இருவர் நினைப்பார்களாயின், அவரவர்களுடைய மனோநோக்கம் சார்பு ஆசை இவற்றிற்கிணங்க, ஒருவருக்கு உயர்வான எண்ணங்களும் மேலான வழிகளும், மற்றவருக்கு இழிவான விஷயங்களும் தீயவழிகளுமே மென்மேலும் உள்ளத்திலுதிக்கும் என்பதேயாம். ஆகவே, அவரவர்களுடைய சுவபாவம், பழக்கம் இவைகளுக்குத் தக்கபடி மனது செல்லுகின்றதென்பது இதனால் வெளியாகின்றது.

இதுவரைசெய்துவந்த விசாரத்தால் நாம் கண்டதென்ன? இக்காலத்தில் மனதையடக்கி ஒன்றின் பின் மொன்றாய் பற்பல விஷயங்களை நினைக்குந் தன்மையை மாற்றி, ஒரு நிலையில் நிறுத்

துவது பெருத்த ஸாஹஸம். இவ்வித தாரணயோகத்தையப்பியஸிப்பதும், மிகக்கடினம். ஆனால், நாம் செய்யக்கூடியது தான் என்ன? தியான தாரணாதி யோகாப்பியாசங்களுக்கு. நேரிடும் அநேக இடுக்கண்களையும், கஷ்ட நிஷ்டூரங்களையும் ஸர்வக்ஞான பதஞ்சலியே யெடுத்துக் கூறியுள்ளார். அவைகளை யெடுத்துரைத்து, அவற்றை வெல்லுவதற்கான ஓர் உபாயமும் கூறியிருக்கின்றார். இவ் வுபாயமும், ஸ்ரீ பகவத்கீதையின் ஸாராம்சமாக வேற்படுகிறது. அதாவது,

"यत्करोषि यदश्नासि तत्कुरुष्व मदर्पणम्"

என்று கீதாசாஸ்திரத்தில் ஸ்ரீ பகவான் கூறியவாறு "தான் ஈசுவராதீனனாய்த் தான் செய்யுங் கர்மங்களையெல்லாம் (கிருஷ்ண) ஈசுவரார்ப்பணஞ் செய்வதே." இதுதான் யோக ரகசியம். மனதைக் கட்டும் வழி. தியானாப்பியாசம். தாரணா நிஷ்டை யென்பதைக் கண்டு தெளிக. சுபம்.

ப. வ. கணபதிசாஸ்திரி.

மறுபிறப்பு.

(௭0௪-வது பக்கத்தொடர்ச்சி.)

கரு-வது முதலிற் பிறப்பது புண்யத்தாலா பாபத்தாலா

இப்படி இச் சீவன் படுபாடுபட்டு ஜனன மெடுக்கிறானென்றோம். இதில் புண்ய ஜீவனோ, அல்லது பாபஜீவனோ முதலில் எந்த ஜன்மத்தை அடைவானென்பதை சாஸ்திரமூலமாய் அறியமுடியாதா? லாட்ரிச் சீட்டுபோல் ஏதாவதொன்றென்று தான் கிடைக்குமா? அல்லது, இருக்கிற கன்மாக்களுக்குள் எது பழசாய் இருக்கிறதோ, அதுதான் ஜன்மாவைக் கொடுக்குமோ என்று கேட்டால் இதை ஆராய்வோம். இச் சீவன் தனது கன்மத்தால் ஜன்மமெடுப்பதிலும், இவனது கன்மமூட்டையில் எது பலமுள்ளதாய் இருக்கிறதோ, அதுதான் ஜன்

கரு-வது முதலிற்பிறப்பது புண்யத்தாலா பாபத்தாலா. ஏகஜ

மத்திற்குக் காரணமாய் வரும். அது கழிந்ததும் அடுத்த கன்மம் எது பலமுள்ளதோ, அதுவரும். இப்படியே பலாபலத்தை ஒட்டி ஜன்மத்திற்கு ஏதுவாகுமென்று பதஞ்ஜலியோக ஸூத்திரத்தில் வியாஸபாஷ்யத்தில் விஸ்தாரமாய் எழுதியிருக்கின்றார். ஆகவே அக்கன்மம் பழசாய் இருக்கவேண்டுமென்ற நியமமில்லை. மிகப்புதிதாயும் இருக்கலாம். இதை இவ்வுபமானத்தால் தெளிவாய் அறியலாம். ஒரு பெரிய பிரபு வீட்டுக் கல்யாணத்தில் தக்ஷிணை கொடுப்பதற்காக பிராமணர்களுக்கு கொடுத்துக்கொடுத்து ஓர் கட்டடத்தினுட் செல்லச்செய்து மறுபடி வெளியேற்றினல் யார் முன்னுல் வெளியேறலாம் பலிஷ்டனுன முறடன் முதல். பிறகு அவனுக்கடுத்தவன். கடைசியில் கிழடு நொண்டி குழந்தைகள். இக்கிரமத்தையே கன்மாவிலும் வைத்துப்பார்க்கவும். இவ்வபிப்பிராயத்தையே ஆசார்யாள் கீதையில் पूर्वाभ्यासेन तेनैव என்ற சுலோகத்தில,

न कृतं चेत् योगाभ्यासजात् संस्कारात् बलवत्तरमधर्मादिकं कर्म तदा योगाभ्यासजनितेन संस्कारेण ह्रियते । अधर्मश्चेत् बलवत्तरः कृतः तेन योगजोऽपि संस्कारः अभिभूयत एव । तत्क्षये तु योगजः संस्कारः स्वयमेव कार्यमारभते । न दीर्घकालस्थस्यापि विनाशस्तस्यास्ति ॥

யோகாப்பியாஸம் செய்தவன் அதன் பலனை அனுபவிப்பதற்கு முன் இறந்துவிட்டாலும் மறுஜன்மமடைந்து அந்த ஜன்மத்தில் இவன் பிரயத்னம் செய்யாமலிருந்தாலும் முன் ஜன்ம அப்பியாஸமானது அவனை இழுத்துக்கொண்டுபோய் அதில் சேர்க்குமென்று சுலோகத்தின் அர்த்தம். இதில் பாஷ்யத்தில் நம் ஆசார்யர்கள் இவ்விதம் விளக்குகின்றார்கள், அதாவது — யோகாப்பியாஸத்தின் ஸம்ஸ்காரத்தைக் காட்டிலும் பெரியதான பலமுள்ள அதர்மம்முதலியன செய்யப்படாமலிருந்தால் அப்போது யோகாப்பியாச ஸம்ஸ்காரத்தா லிழுக்கப்படலாம். அதர்மம் பலமுள்ளதாயிருந்துவிட்டால் அப்போது யோகாப்

பியாஸ ஸம்ஸ்காரம் அடக்கப்பட்டுத் தலைகிளப்பாமற்போகும், ஆனால் அது அப்படியே போய்விடாது. பலமான அவ்வதர்மம் தொலைந்தவுடன் இது பழையபடியும் தலைகிளப்பும். தானே கார்யத்தை அப்போது ஆரம்பிக்குமே தவிர எவ்வளவு காலமானாலும் பலனையளிக்காமற் போய்விடாதென்றார். இதனால் ஒரு கன்மமும் வீணாய்ப் போகாதென்றும் எல்லாம் தான் பலனையளிப்பதற்காகச் சமயத்தைப் பார்த்துக்கொண்டிருக்குமென்று மேற்பட்டது. ஆதல்பற்றியே நாம் தினந்தோறும் ஸ்நானம் செய்யும்போது மனதில் பயத்தை வைத்துக்கொண்டு ஜாக்கிரதையாய் இருப்பதற்காகச் செய்யும் ஸங்கல்பத்தில்,

विचित्राभिः कर्मगतिभिः विचित्रासु योनिषु पुनः पुनरनेकधा जनित्वा केनापि पुण्यकर्मविशेषेण इदानीन्तनमानुष्ये

விசித்திரமான கன்ம கதிகளால் விசித்திரமான யோனிகளில் அடிக்கடி அனேகவிதமாய் ஜன்மமெடுத்து ஏதோ ஒரு புண்ய கன்மாவால் இப்போது மனிதஜன்மத்தில் என்றுசொல்கிறோம் நாம் வைராக்யமடையவேண்டுமாயின் இந்த ஒருவாக்கியமே அனுஸந்தானம் செய்யப்போதுமானது. இருக்கட்டும். இப்படிக்கன்மம் தான் எவ்வளவு இருக்கும். அது இப்போது நாம் இறந்து மறுஜன்மமடைவதற்குள் காலியாய்விடாதா என்றால் அதுதான் இல்லை. இக்கன்மாவானது மூட்டைமூட்டையாய் நம்மிடம் குவிந்து கிடக்கின்றன. அவைகளை நம் பெரியோர் மூன்று மூட்டைகளாய்க் கட்டிப்போட்டனர். அவைகளுக்கு ஆகாமி மூட்டை ஸஞ்சிதமூட்டை பிராரப்த மூட்டையென்று பெயரையும் எழுதி ஒட்டினர். எதனால் இப்பெயர் வாய்ந்ததென்றால் அதனைக் கூறுவாம். ஆகாமி என்ற வடமொழிப்பதத்திற்கு வரப்போகிறது என்றர்த்தம். ஆகவே இனி நமக்கு அனுபவத்தைக் கொடுக்கத்தயாராகிக் காத்துக்கொண்டிருக்கும் கன்மங்கள் எவையோ அவை. ஸஞ்சிதம் என்ற சொல்லுக்கு சேர்த்துவைக்கப்பட்ட பொருள் என்றர்த்தம். ஆகவே அவை இப்போது பயனைக்கொடுக்கத்தயாராயில்லையென்றேற்

௬௩—வது முதலிற்பிறப்பது புண்யத்தாலா பாபத்தாலா. எகசூ

பட்டது. இந்த ஜன்மத்தில் நாமிப்போது செய்யும் புண்யபா பங்களெல்லாம் அந்தஸஞ்சிதமூட்டையில்தான்போய்ச்சேரும். ப்ராரப்தம் என்பதற்கு ஆரம்பிக்கப்பட்டது என்றர்த்தம். ஆகவே இப்போது நாம் அனுபவிக்கும் சுகமோ, துக்கமோ, இதுதான் ப்ராரப்தம். இந்தப் பிராரப்தம் மட்டிலும் அனுப வித்துத்தான் தீரவேண்டும். இப்பிராரப்த கன்மம் இந்த சரீ ரம் போய்விட்ட பிறகு போய்விடுவதென்றில்லை. இதுவே அனேக ஜன்மங்களைக்கொடுக்கக் கூடியதாயும் அச்சன்மங்க ளிற் பின்தொடரக்கூடியதாயு மிருக்கலாம். அவ்விதம் இப்பி ராரப்தம் கழிந்ததும் ஆகாமி மூட்டையில் எது பலமுள்ளதோ அது திடீரெனக் குதிக்கும். அப்படி ஆகாமி மூட்டையில் எவ் வளவு எண்ணமுடியாத ஜன்மாவைக்கொடுக்கக் கூடிய கன்மம் கார்த்திருக்குமோ தெரியாது. பிறகு ஸஞ்சித மூட்டையிற் குவிந்துகொண்டே இருக்கிறது. ஆகையால் இப்போது இற ந்து மறுஜன்மமடைவதற்குள் காலியாய்விடாதா வென்று கேட்டதற்கு நீங்களே ஸமாதானம் தேடிக்கொள்ளுங்கள். ஆகையால்தான் எப்போது ஜனனமெடுக்க ஆரம்பித்தோமெ ன்றதைக் கணக்கிடமுடியாதென்று சாஸ்திரம் முறையிடுகிறது. இத்தகைய ஜன்மம் நீங்கவேண்டுமென்றால் ஞானமார்க்கத்தை அடைந்தால்தான் தொலைக்கலாம். அத்தகைய ஞானமார்க்கத் தையடைய நாம் முற்கூறியபடி தேவர்களது கடனைத் தீர்த் தால்தான் அவர்கள் நம்மை விடுவார்கள். இல்லாவிடில் ஞான மார்க்கத்தில் அவர்கள் நமக்கு இடையூறுகளைச் செய்துகொ ண்டே இருப்பார்கள்.

ஞானமில்லாவிடில் கன்மம் தொலையாதென்பதை பகவான்,

ज्ञानाग्निस्सर्वकर्माणि भस्मसात्कुरुतेऽनघ ॥

ஞானமென்னும் அக்னிதான் எல்லாக் கன்மங்களையும் சாம்ப லாய் ஆக்கிவிடும் என்றார். இங்கு பாஷ்யத்தில் ஆசார்யாள் எல்லாக்கன்மங்களையும் என்றால் ஆகாமி ஸஞ்சிதம் இந்த இரண் டையும் என்றுதான் அர்த்தம், பிராரப்தம் என்பது அனுபவி

த்துத் தீரவேண்டியீதுதான் என்றார். இதை விரித்தாற்பெருகும். ஆகவே இனி பிரகிருதத்தைத் தொடர்வாம்.

ஆகவே இக்கன்மங்களாற் பல ஜன்மத்தைப் பெற்றிருக்கிறோமென்பதோடு இனியும் எவ்வளவு ஜன்மத்தோடுதான் முடியுமோ தெரியாது. ஒரு கன்மானுபவம் முடியுமட்டோ அல்லது பல கன்மானுபவம் முடியுமட்டோ சாமான்யமாய் இருக்கிற துர்பல கன்மாவியினும் பலனைக் கொடுக்கிற பரியந்தம் காத்திருக்குமேதவிற ஒரு போதுமறியாதென்பதை முன்னமேயே கூறிவிட்டேன். இதைப்பற்றி விஸ்தாரமாய் நம் பரமாசார்யாள் சாந்தோக்கியம் ஐந்தாவது அத்தியாயத்தில் விசேஷமாய்க் கூறியிருக்கிறார். அதையும் இங்கு வெளியிடுகிறேன்.

(தொடரும்.)

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்

பிராமண ஸமூஹத்திற்கு ஓர் விக்ஞாபனம்.

நமது புண்ய பாரதபூமி எக்காலத்திலும் குன்றின்மேலிட்ட விளக்குபோல் விளங்க முக்கிய காரணமாயுள்ளது வேதமே. உலகமெலாம் படைத்த சதுர்முகப் பிரமனும் அவ்வேதத்தையே முக்யஸாதனமாகக்கொண்டாரெனில் வேதம் அநாதி பெருமைபெற்றதென்பதற்கு வேறு ஸாக்ஷி வேண்டுமோ? எவ்வாசனுகூஷியிலும் எக்காலத்துமழியாது நிற்குமிவ்வேதம் இஹ பர ஸாதகமானதென்பதையும் ஆத்மாவைப்பற்றிய உண்மையையறிவிப்பதிது ஒன்றே என்பதையும் (நமது மஹரிஷிகள் சொல்லாது) ஆங்கில அறிஞர்களிடமே அதைக் கற்றதாக சிலர் சொல்லுகின்றனர். அஃதிருக்கட்டும். வேதாத்யயனம் பிராமணர்களுக்கு காரணமின்றி அவசியமென ஆபஸ்தம்பரும், வேதமோதாத பிராமணர் நாலாவது தலைமுறையில் பிராமண்யத்தை யிழக்கிறானென்று, பலரிஷிகளும் சொன்னது

தற்சமயம் லௌகிகமார்க்கமே மோக்ஷமென்று நினைத்தவருள்ளத்திலும் பதிய ஆரம்பித்துவிட்டது.

ஸகலத்திற்கும் காரணமான வேதத்திற்கு ஆதாரபூதமாயுள்ள அந்தணரையன்றி வேறெவரையும் நமஸ்கரியேனென போஜராஜனது ஸித்தாந்தம. பகவத்பாதாசாரியாள் ஸ்ரீகீதை உரை யெழுதும்போதும் பிராமணரை இரக்ஷித்தால் உலகை இரக்ஷித்ததாகு மென்றும், துவக்கியுள்ளார். அதிக மெதற்கு? சுருக்கிச் சொல்லின், வேதத்தினுல்தான் உலகம். அவ்வேதமந்தணரிட மென்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது. தற்காலத்தில் வேதத்தை அந்தண ரோதாததால், தேசமும் மஹா ஜனங்களும் முக்யமாக, பிராமண ஸமூகமும் கெட்டது. கெட்டு வருகிற தென்பதை மறுப்பாரிரார். ஆதலால் எவ்வுயர்ந்த அல்லது தாழ்ந்த பதவியிலுள்ள மஹம்மதியரும் கிரிஸ்தவரும் குரானையும் பைபிலையும் படித்தே தீருவதைப்போல் அந்தணனுய்த் தோன்றிய ஒவ்வொருவனும் வேத மோதியே தீரவேண்டும். பிழைப்பிற்கு வேறெவ்வேஷம் தரித்தாலும் காலைமாலைகளில் "ஒரு சாகையை ஓதியவரும் பிராமணனுவா" னென்றசொற்படி ருத்ரம், புருஷ சூக்தம், உபநிஷத் இவைகளையாவது அத்யயனம் செய்தல்வேண்டும். அஃதில்லாமல் நமது ஸமூகம் படும் துன்பத்தை எடுத்துரைக்க ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனும் வல்லனல்லன். சென்னைபோன்ற மேனுட்டு நாகரீகத்திற்குப் பிறப்பிடமான விடங்களிலேயே, அமரகலா விலாஸினீ ஸபையின் தூண்டுதலால், காலை மாலைகளில் பல லௌகிகர்கள் உபநிஷத்தை கற்றுவருகின்றனர். பல பேட்டைகளிலும் இதே போல் பலர் ஷிபார் முயற்சியால் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். வேலூர் திருப்பத்தூர்களில் நடந்துவருவது ஸந்தோஷமான செய்தி. ஆங்காங்கு நகரங்களில் லௌகிகர்கள் இதேபோல் காலைமாலைகளில் கூடுமானவரை வேதசாஸ்திரங்களைக் கற்றுவரும்படி மிகத் தாழ்மையாக வேண்டுகிறேன்.

வெ. ஸோமதேவ சர்மா.

மதிப்புரை.

திருவாதி டிஸ்டிரிக்ட் முனிஸீபான ஆனேதாண்டவபுரம் பிரம்ம ஸ்ரீ சுப்பிரமணிய அய்யாவர்களால் அனுப்பப்பட்ட "ஸாமவேதீய வைச்வதேவ விவேகம்" என்ற கிரந்தத்தை வரப் பெற்றேம். இந்தக் கிரந்தம் ஷை சுப்பிரமணிய அய்யரவர்களால் காதிர கிருஹ்யம், கோபால கிருஹ்யம், சாந்தோக பரிசிஷ்டம், கௌதம தர்மம், வைத்தியனுத தீக்ஷிதீயம் முதலான கிரந்தங்களை ஆதாரமாகக்கொண்டு, வித்துவான்களுடைய ஸகாயத்தின் பேரில், எழுதி அசசிட்டு வெளியிடப் பட்டிருக்கிறது. இதில் வைச்வதேவ மஹாத்மியம், கிருஹ்ய பேதங்கள், கிருஹ்யங்களிலுள்ளவைச்வதேவ ஸம்பந்தமானசூத்திரங்கள், ஆசாரம், மற்றும் சில விஷயங்கள், இவைகள் வெளி வந்துள்ளன. வெவ்வேறிடங்களின்றும் இவ்விஷயத்தைத்தேடிஎடுத்து வெளியிட்டிருப்பதால் பலபேர்களுக்கு உபகாரமாயிருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். இங்கிலீஷ் பாஷையில் விசேஷமான பாண்டித்யம் பெற்று உயர்ந்த லௌகீக உத்தியோகத்திலிருக்கும் கனம் சுப்பிரமணிய அய்யரவர்கள் நம் ஸநாதன வைதிக கர்மானுஷ்டானங்களை நன்கு விருத்தி செய்ய வேண்டு மென்று எடுத்துக் கொண்டிருக்கும் சிரத்தையைப் பார்க்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. இவரைப்போல் மற்று முள்ளவர்களும் சிரத்தை யெடுத்துக் கொண்டால் நம் ஸநாதநதர்மாபிவிருத்தியும் தேச க்ஷேமமும் ஏற்படு மென்பது திண்ணம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னமமே
சூழ்கவையகமுந் துயர் தீர்க்வே.